ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

28.05.2026

1. தருமவழி கொண்டு ஞானத்தை
தரணியோர் யாவரும் அடைய வேண்டி
ஆறுமுகனார் தலைமை ஏற்றிட
அரங்கன் யான் பிரணவக் குடில் படைத்து

2. படைத்து அற்புதம் நிகழ்த்துகின்றேன்
பழுதின்றி ஞானவழிக்கு வருக
தடையின்றி பிரணவக் குடில் நோக்கிவர
தரணியோர் ஞானம் பெறுவரெனக் கூறி

3. கூறியே பராபவ விடை திங்கள்
குறைவிலா ஈராம் குருவார அருளாசி
வரமாக அரங்கனும் உரைப்பேன்
வழிமொழிந்து எமை நோக்கிவர

4. வருகவே சோதி சொரூபிலே
வடிவேலனும் அரங்கன் யானும்
தருகின்ற காட்சி ஆசி ஏற்று
தரணியோர் குடிலின் அருளமுது உண்டு

5. உண்டுமே அரங்கன் என்பால்
உண்மையான சரணாகதி கொண்டு
தொண்டர்களாகி பூசை கலந்து
தொடருகின்ற தருமத்தில் பொருள் உதவி

6. உதவி செய்து தொண்டும் செய்து
உயர் ஞானம் ஜீவகாருண்யத்தை
ஆதரித்து சைவ நெறி ஏற்று
ஆறுமுகா அரங்கா எனும் செபதபம்

7. செபதபம் நித்தம் நித்தம் செய்து
செயல்களிலும் உண்மை நின்றிட
அபயமென என் வழித் தொடர
அரங்கன் யான் சீடன் ராம்குமார் கரம்பட

8. கரம்பட தருகின்ற தீட்சை தன்னை
கலியுகத்தார் ஏற்று வருக
வரமாக எங்கள் சக்தி கிட்டி
வையகத்தில் வளர்ச்சி மாற்றம்

9. மாற்றம் பல வகையும் கண்டு
மண்ணுலகில் கலியுக ஞானிகளாய்
தேற்றம் அடைவர் என்பேன்
தொடர் தருமம் செய்பவரெல்லாம்

10. எல்லோரும் தன்னோடு குடியவரின்
இடர்களையும் வென்று மீள்வர்
வல்லமைபட அவர்களையும் உலகில்
வரம் மூலம் ஞானிகளாக்கிடுவர்

11. ஆக்கமும் பரிபக்குவமும் தருகின்ற
ஆறுமுக அரங்கனென் மார்க்கம்
தேக்கமின்றி உலகெல்லாம் பரவிட
தெரிவிப்பேன் ஞான ஆட்சிக்காலம் ஆகும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி